# இணையத் தளங்களைப் பயன்படுத்தித் தமிழ் கற்பித்தல் - ஒரு பார்வை

K.Uthaman . M.A., M. Phil.,Med.
Tamil Teacher, Yishun Town Secondary School , Singapore
A member of Tamil Internet Steering Committee (TISC) , Singapore

---

## முன்னுரை

இணையம் வழிக் கற்றல் கற்பித்தல் என்பது, பல பாடங்களுக்கும் இன்று சாத்தியமாகியிருக்கின்றது. இத்தகைய சூழலில், தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் இணையம் வழிக் கற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். ஏன் அப்படிச் செய்தல் வேண்டும்? அதனால் என்ன பயன் ? என்றால், மற்ற பாடவேளைகளில் கணினியைப் பயன்படுத்திப் புதுமையான வழிகளில் கற்கும் மாணவர் தான் தமிழ் வகுப்புக்கும் வருகின்றார். `` பாடப் புத்தகத்தை எடுத்துக்கொள்ளுங்கள் , பக்கம் ஐம்பதிலுள்ள பாடத்தை வாசியுங்கள் `` என்று அவரிடம் சொன்னால், தமிழ்ப்பாடத்துக்கு இந்தப்புத்தகத்தை விட்டால் வேறொன்றுமில்லை போலும், என்ற ஒரு தவறான எண்ணம் அவரிடம் ஏற்பட்டுவிடக்கூடும். அல்லது , கணினி வழிக் கற்பித்தலுக்குப் பொருத்தமில்லாதது தமிழ்மொழி என்றும் அவர் எண்ணிவிடக்கூடும். இதனால் தமிழ்மொழி மீது அவரது மதிப்பு , ஆர்வம் எல்லாம் நாளடைவில் குறையவும் கூடும். இதுபோன்ற நிலை உருவாகாமல் தடுக்கவும், ஒரு புதிய எதிர்பார்ப்புடன் தமிழ் வகுப்பறைக்கு வரும்படி மாணவர்களை ஈர்க்கவும் இணையத்தைப் பயன்படுத்தித் தமிழ்க் கற்பித்தலில் ஈடுபடவேண்டும்.

## கருத்தின் பொருத்தம்

``உலகம் வேண்டுவன வேண்டாதன பொருந்துவன பொருந்தாதன எல்லாம் கலந்து குழம்பிய நிலையில் கதம்பமாக உள்ளது ``என்று டாக்டர் மு.வ. அவர்கள் தமது இலக்கியத்திறன் என்ற நூலில் உலகின் இயல்பைப் பற்றிக் குறிப்பிடுவார். உலகம் குறித்துக் கூறப்பட்ட இக்கருத்து இணையத்துக்கும் பொருத்தமே. ஏனெனில் இணையத்திலும் அவ்வாறே பலவும் இடம் பெற்று எளிதில் கிடைக்கப் பெறுகின்றன.ஆகவே இணையம் வழிக் கற்பித்தலில் ஈடுபடும் தமிழாசிரியர் பலவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இனிஅவற்றைக் காண்போம். முதலாவதாக, குறிப்பிட்ட ஓர் இணையப்பக்கத்தைத் தன் மாணவர்க்குத் தமிழ் கற்பிக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஓர் ஆசிரியர் விரும்பும்போது, அவ்விணையப்பக்கம் கல்வியமைச்சு வகுத்துள்ள கருப்பொருள்களோடு தொடர்புடையதா? என்பதைக் கவனிக்க வேண்டும். அடுத்ததாகக் குறிப்பிட்ட அவ்விணையப்பக்கத்தில் இடம் பெற்றிருக்கின்ற கருத்துகள் தன் மாணவரது நிலைக்கு உகந்தனவா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். இவ்வடிப்படைகளில் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் இணையப்பக்கம், நமது பாடப்புத்தகத்தில் அமைந்துள்ள தலைப்பை ஒட்டியே இருக்குமாயின், பாடப்புத்தகத்தில் இடம் பெறாத பல புதிய தகவல்களைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில், அங்ஙனம் இல்லாதிருக்குமானால், இணையத்தில் குறிப்பிட்ட பக்கத்தைக் கற்கும் மாணவர்க்கு ஆர்வமோ அவாவும் நிலையோ ஏற்படா.

## மொழிநடை

இணையப்பக்கத்தைத் தெரிவு செய்கையில் கருப்பொருள்,கருத்து ஆகியவற்றை மட்டுமே

கவனத்தில் கொள்ளாமல் வேறொன்றையும் மொழியாசிரியர் முக்கியமாக எண்ணிப் பார்க்க வேண்டும். அது யாதெனில் அது தான் மொழிநடை. ஏனெனில் இணையம் பல்வேறு மொழிநடையிலான பல்வேறு தகவல்களைத் தன்னகத்தே கொண்டிலங்குகின்றது. எனவே , இணையம் வழிக் கற்பிக்கப்புகும் ஆசிரியர், குறிப்பிட்ட இணையப்பக்கம் தன் மாணவரின் மொழியாற்றலுக்கு ஏற்புடையதா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

## முன்னேற்பாடு

மேற்கூறியவை யாவும் குறிப்பிட்ட ஓர் இணையப்பக்கத்தில் நிறைவான ஒரு நிலையில் இருக்கும்போது, ஆசிரியர் அவ்விணையப்பக்கத்தைத் தமிழ்க் கற்பித்தலோடு ஒருங்கிணைக்க வேண்டும். அவ்வாறு ஒருங்கிணைக்கும்போது, கற்பித்தல்உத்திகளையும் , கற்றலுக்கான நடவடிக்கைகளையும் பாடக்குறிப்பில் வரையறுத்துக் கொள்ளல் வேண்டும். இதன் பின்பே, அவ்விணையப் பக்கத்தைப் பயன்படுத்திக் கற்பித்தலைத் தொடங்கவேண்டும் . இவ்வழிமுறைகளைக் கடைப்பிடித்தால் தான் இணையம் வழிக்கற்றல் கற்பித்தல் பயன்மிக்க விளைவைத் தரும். இல்லையெனில், மாணவர்க்கு மயக்கமே ஏற்படும். விளைவு நாம் எதிர்பார்த்ததற்கு எதிர்மாறாக ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மேற்கூறப்பட்ட வழிகளில் நின்று எனது பள்ளி மாணவர்க்கு ஒரு சில இணையத்தளத்தைப் பயன்படுத்தித் தமிழ் கற்பித்திருக்கின்றேன். அது குறித்து இனிக் காண்போம்.

## இணையத்தில் கிராமியக்கலை பாடம்

எங்களது கல்வியமைச்சால் உயர்நிலை மூன்றாம் வகுப்புக்கு உருவாக்கப்பட்ட பாடப்புத்தகத்தில் கலையும் பண்பாடும் எனும் கருப்பொருளில் தமிழகக் கிராமியநடனங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கி ஒரு பாடம் இடம்பெற்றிருக்கிறது. இதேக்கருப்பொருளோடு மிகவும் தொடர்புடைய தகவல்கள், http://www.intamm.com/folk/index.htm என்ற இணையப்பக்கத்தில் காணப்பட்டன . ஆகவே இப்பக்கத்தை மேற்படி வகுப்புப் பாடத்தோடு ஒருங்கிணைக்கத் தீர்மானித்தேன். பிறகு அவ்விணையப்பக்கத்தை மையமாக வைத்து மொழித்திறன்களை வளர்க்கும் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, பாடக்குறிப்பைத் தயாரித்துக் கொண்டு கற்றல் கற்பித்தலைச் செயற்படுத்தினேன். கற்றல் விளைவும் மனநிறைவளிக்கும் வகையில் கைகூடி வந்தது .பின்னிணைப்பில் உள்ள பாடக்குறிப்பை ஒரு கண்ணோட்டமிட்டால், கற்றல் கற்பித்தல் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பது நன்கு விளங்கும்.

## இணையத்தில் இந்திய ஒவியக்கலை பாடம்

இவ்வாறே http://www.aramthinai.com/kalai/thurigai/ravivarma_jan17.asp. என்ற இணையப் பக்கத்தில் ``ஓவியக்கலையின் ராஜாரவிவர்மா `` என்ற தலைப்பில் இடம் பெறறிருக்கின்ற தகவல்கள், எங்கள் கல்வியமைச்சின் பாடத்திட்டக் குழுவால் உருவாக்கப்பட்டுள்ள உயர்நிலை மூன்று வழக்க வகுப்புக்குரிய (Sec 3 Normal) பாடப்புத்தகத்தில் `` ஓவிய உலகில் ராஜா ரவிவர்மா`` என்ற தலைப்பிலமைந்த பாடத்தோடு மிகவும் தொடர்புடையதாக இருக்கின்றன. தவிர, கட்டுரையின் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டவாறு கருத்தாலும் மொழிநடையாலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்க்கு உகந்தவொரு இணையப்பக்கமாகவிருக்கிறது. இக்காரணங்களால் இவ்விணையப்பக்கத்தைத் தமிழ்க்கற்பித்தலோடு ஒருங்கிணைத்தேன். இவ்விணையப்பக்கத்தைப் பயன்படுத்தித் தமிழ் கற்பித்த வேளையில் மொழித்திறன்களை வளர்க்கும் நோக்கில் , மூன்று விதமான பயிற்சிகளை மல்ட்டி மீடியா பில்டர்,(Multimedia

builder) ஹாட்பொட்டேட்டோஸ் ( Hot Potatoes) என்று சொல்லக் கூடிய இரு வேறு மென்பொருளில் தயாரித்துத் தமிழ்க் கற்பித்தலை இனிதே நிறைவேற்றினேன்.

அம்மூன்று பயிற்சிகள் யாவை எனில்? கருத்துமாறா வாக்கியப் பயிற்சி, முன்னுணர்வுக் கருத்தறிதல், தெரிவுவிடைக் கருத்தறிதல் ஆகியனவாகும். இம்மூன்று பயிற்சிகளையும் மேற்குறிப்பிட்டுள்ள இணையத்தளத்தில் இடம் பெற்றிருக்கின்ற கருத்துகளை மையமாக வைத்தே அமைத்தேன். ஏன் அவ்வாறு செய்தேனெனில், மாணவர்கள் மொழித்திறன்களை வளர்த்துக் கொள்ள பயிற்சிகளைச் செய்யும் அதே நேரத்தில், அவர்களின் மனத்தில் இணையப் பனுவலின் மையக்கருத்துகள் நன்கு பதிய வேண்டும் என்பதாலேயாகும். இணையப் பக்கத்திலுள்ள தகவல்களைப் படித்துவிட்டுப் பயிற்சிகளை மாணவர்கள் செய்து கொண்டிருந்த தருணத்தில், அவர்களைக் கண்காணிக்க நான் வகுப்பறையை வலம் வந்தேன். அப்போது அவர்கள் பயிற்சிகளைச் செவ்வனே செய்ததைக் கண்டு மனநிறைவடைந்தேன். இந்நடவநடிக்கையின்போது மாணவர் எதிர்நோக்கிய இடர்ப்பாடு யாதெனில், பனுவல் சற்று நீளமாக இருந்ததால் வாசிப்பதற்குச் சற்றுக் கால அவகாசம் அதிகம் தேவைப் பட்டதைக் குறிப்பிடலாம். ஒன்றிரண்டு அருஞ்சொற்களின் பொருளை அவர்களால் ஊகிக்க முடியாதபோது, ஆசிரியரின் உதவியை நாடினர். இது தவிர்க்க முடியாத ஒன்று தான்.இது ஒரு குறையல்ல.

## கதைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் முறைகள்

இணையத்திலுள்ள கதைகளை நேரடியாக மாணவர்களை வாசிக்கச் செய்து பல மாதிரியாக வினாக்களை எழுப்பி மாணவர்களது சிந்தனையாற்றலையும் மொழித்திறன்களையும் வளர்க்கலாம். அவ்வாறு www.webulagam.com/children/arabiannights என்ற இணையப்பக்கத்திலுள்ள ``பொறாமைக்காரன்`` என்ற ஒரு கதையை வாசிக்கச் செய்து அதனையொட்டிச் சிந்திக்க எழுப்பப்பட்ட வினாக்களைக்கீழே காண்க.

1. இக்கதையில் நம்ப முடியாதது எது? ஏன்?
2. இக்கதையிலிருந்து நீ அறிவது யாது ?
3. இக்கதை வேறு எப்படி முடிந்திருக்கலாம்?
4. ராஜாவாகும் வாய்ப்பு உனக்குக் கிட்டியிருந்தால், நீ பொறாமைக்காரனுக்கு என்ன செய்திருப்பாய்?
5. பொறாமைபட்டவனுக்கும் செல்வம் கிடைப்பது போல கதை முடிகிறது. அதனால் பொறாமைபடுவதிலும் பயனுண்டு என்று எடுத்துக் கொள்ளலாமா?

இவ்வாறு எல்லா நேரங்களிலும் கணினிக் கூடத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்று கற்பிக்க முடியாதல்லவா? அதனால் இணையத்தளங்களில் பொருத்தமான கதைகளோ கட்டுரைகளோ கிடைக்கும்போது அவற்றை அச்சிட்டு ( Print) கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு வகுப்பில் ஒரு முறை, சிறுகதை எழுத மேற்கொண்ட முயற்சியை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல முடியும். http://www.kumudam.net/junction/mainpage.html என்ற இணையத்தளத்தில் "என்ன சிரிப்போ .. உந்தன் சிரிப்பு" என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள கதையானது மாணவப்பருவத்தில், பிள்ளைகளுக்கிடையே வழக்கமாக எழக்கூடியப் பிரச்சினையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நல்ல ஒரு சிறுகதையாகும். எனவே, அதனைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்திக் கொண்டேன். எவ்வாறெனில் , ஒரு வகுப்பில் அக்கதையைக் கொடுத்துப் படிக்கச் சொன்னதோடு மாணவர்களின் சிந்தனைத் திறனைத் தூண்டும் நோக்கில் இக்கதையை இரு வேறு கதைகளாகப் பிரித்துப் பார்க்கத் தூண்டினேன். உண்மையில் இது ஒரே கதை தான். ஆனால், சற்றுக் கருத்தூன்றிக் கவனித்தபோது இரு வேறு கதைகள் ஒரே கதையாகப்

பின்னப்பட்டிருப்பது போல் தெரிந்தது. அதனால் அவ்வாறு செய்தேன். மேலும், அதே தலைப்பில் சொந்தமாக ஒரு கதை எழுதவும் மாணவர்களைத் தூண்டினேன். இம்முயற்சிக்கும் மாணவர்களிடம் ஆக்ககரமான பிரதிபலனைக் காணமுடிந்தது. இதே போல ``திருச்சி சுற்றிப் பார்க்கலாமா! `` என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள கட்டுரையை மாதிரிக் கட்டுரையாக வைத்துக் கொண்டு ஒரு சுற்றுலாக்கட்டுரை எழுத மாணவர்களை ஊக்குவித்தேன். இம்முயற்சியிலும் மாணவர்கள் நன்கு பயன்பெற்றனர் என்றால் அது மிகையன்று.

## இணையத்தில் சில மொழிப்பயிற்சிகள்

இணையத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் அதே நேரத்தில் பிறருக்குப் பயன்படுமாறு அவ்விணையத்தில் நாமும் ஏதேனும் செய்து வைக்க வேண்டும் இல்லையா? எனவே, இந்த நோக்கத்திலே ஒருசில மொழிப்பயிற்சிகளை உருவாக்கி http://schools.moe.edu.sg/ytss/newintown.html என்ற எமது பள்ளி இணையத்தளத்தில் ஏற்றி வைத்துள்ளேன். அவற்றைப் பயன்படுத்திக் கற்பித்தும் வருகின்றேன். மரபுத்தொடர் , முன்னுணர்வுக் கருத்தறிதல், தெரிவு விடைக் கருத்தறிதல் முதலான சில பயிற்சிகள் இருவழித்தொடர்பு முறையில் ( Interactive Excercies ) அமைக்கப் பட்டிருக்கின்றன. கருத்துமாறா வாக்கியங்கள் , வேற்றுமை உருபு, முதலான வேறு சில பயிற்சிகளுக்குப் பயிற்சித்தாள்கள் இட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. இணையத்தளத்தைப் பயன்படுத்தித் தமிழ்க் கற்பிப்பதற்கான சில பாடக் குறிப்புகளும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இவை சிங்கப்பூர் பாத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டும் தேர்வு நோக்கிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை யாவும் தமிழ் கற்கும் மாணவர்க்கும், தமிழாசிரியர்களுக்கும் உதவும் என்று நம்புகிறேன்.

## முடிவுரை

இக்கட்டுரையில் இதுகாறும் ஓர் இணையப் பக்கத்தைப் பயன்படுத்திக் கற்பிக்கப்புகுமுன் அங்கே இடம்பெற்றுள்ள கருத்து, மொழிநடை, முதலியவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அதோடு கற்றல் கற்பித்தலுக்கான உத்திகளை வரையறுத்துக்கொண்ட பிறகு கற்பித்தலில் ஈடுபடவேண்டும் என்று பார்த்தோம். மேலும் , அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஒரு சில முயற்சிகளையும் கண்டோம். தவிர நேரடியாக இணையத்தைப் பயன்படுத்திக் கற்பிக்க நேரமில்லாதபோது எப்படி அங்குள்ள தகவல்களை ஆக்ககரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் பார்த்தோம். இவ்வழிகளில் இணையம் மூலம் கற்பித்தால், தமிழ் கற்கும் சூழலில் ஒரு புதிய மாற்றம் ஏற்படும். அம்மாற்றத்தினால் தமிழ் கற்க வரும் மாணவருக்குச் சலிப்போ , ஆர்வமின்மையோ ஏற்படாது. மாறாக அவர்கள் தமிழ் வகுப்புக்கு ஆர்வத்தோடும் நாட்டத்தோடும் வருவார்கள் என்பது திண்ணம். தொலைநோக்கில் பார்த்தால் ஆயுள் முழுவதும் கற்கும் பழக்கத்துக்கு இணையம் வழிக்கற்பித்தல் ஒரு தூண்டு கோலாகவும் அமையும்.

*****************************************************************************

## I. பாடக்குறிப்பு

பாடம் - தமிழ்மொழி
தலைப்பு - கிராமியக்கலைகள்
வகுப்பு - உயர்நிலை மூன்று
பாடவேளைகள் - மூன்று

## சிறப்பு நோக்கம்

1.கிராம மக்களின் பழக்க வழக்கங்களை, பொழுதுபோக்குகளை அறிவர்

## சிந்தனைத் திறன்கள்

1. மையக்கருத்துகளை அடையாளங்காணுதல்
2. காரண காரியங்களை ஆராய்தல்

## கற்றல் \ கற்பித்தல் கருவிகள்

இணையப் பக்கம்

1. http://intamm.com/folk/index.htm
2. பயிற்சித் தாள்

கற்றல் சூழல்

இணையத் தொடர்புடைய கணினிக் கூடம்

கற்றல் கற்பித்தல் உத்திகள்

1.மேற் குறிப்பிட்ட இணையப் பக்கத்திற்குச் சென்று நாட்டுப் புறக்கலைகளின் வரலாறு என்ற தலைப்பிலுளள முன்னுரை, பள்ளு, குறவஞ்சி, கும்மியடித்தல், பொம்மலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம். ஆகிய தலைப்புகளில் உள்ள தகவல்களை மட்டும் வாசிக்கும் படி மாணவர்க்கு அறிவுறுத்தல்.

2.பயிற்சித்தாளைக் கொடுத்து அவற்றுக்கு விடை காணும் நோக்கில் குழுவில் கலந்து பேசவும் , வகுப்பின் முன்வந்து விடை கூறவும் மாணவரிடம் கூறல்.

3. வினாக்களுக்குப் பயிற்சித் தாளில் விடை எழுதவும் பணித்தல் / விடைகளைத் தட்டச்சு செய்யத் தெரியுமானால் அவ்வண்ணம் செய்யப் பணித்தல்.

## II.பயிற்சித் தாள்

1. நாட்டுப்புறக் கலைகள் எப்படிப் பட்டவை?
2. பள்ளு நாடகம் யாரைப்பற்றியது ?
3. குறவஞ்சியில் அதிகமாகக் கூறப்படும் நிகழ்ச்சி யாது ?
4. கும்மியடித்தலின் தற்போதைய நிலை யாது ? அதற்குக் காரணம் என்னவாக இருக்கலாம்?
5. பொம்மலாட்டத்தில் இடம் பெறும் சூத்திரக்காரி யார் ?
6. கரகாட்டத்தின்போது மக்களின் ஆரவாரத்திற்குக் காரணம் என்ன?
7. காவடி எதற்காக எங்கே தூக்கிச் செல்லப் படுகின்றது?

பின்வரும் சொற்களுக்குப் பொருள் எழுதுக

1. உள்ளீடாக
2. தானியத்தை
3. பெருவாரியாக
4. தக்கவாறு
5. வியப்பான

பின்வரும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக

1. பாடல்களும் ஆடல்களும்
2. ஆடையணி
3. ஆட்டி அசைத்து
4. ழன்று சுழன்று